Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 377/2025 |
| Police station | : | தூக்கணாம்பாக்கம் P.S |
| Deposition of witness for Prosecution | : | LW1 / PW1 |
| Name | : | திரு. தமிழ்வாணன் |
| Father Name/Husband Name | : | த/பெ. பக்கிரி |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 22.05.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.
(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். ).

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது அழகியநத்தம் கிராமத்தில் வசித்து தனியார் கம்பெனியில் டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 21.12.2024 ம்தேதி இரவு சுமார் 7.00 மணியளவில் அழகியநத்தம் பாலம் வழியாக மேற்கண்ட தனியார் கம்பெனி லாரியை ஓட்டி வரும்போது வழியில் இரண்டு நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். ஆரன் அடித்தும் வழிவிடாமல் இருந்ததால் நான் வண்டியில் இருந்து இறங்கி போய் அவர்களிடம் வழிவிடுமாறு கேட்டதற்கு அவர்கள் இருவரும் என்னை பார்த்து திமிராக வழிவிட முடியாது என்று கூறியதால் எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது அந்த வழியாக வந்த சிலர் எங்களை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு லாரியை கம்பெனியில் விட்டு விட்டு இரவு சுமார் 9 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது இரு சக்கர வாகனத்தில் வந்த நான்கு நபர்கள் என் வீட்டு வாசலில் நின்று என்னை வெளியே வா என்றுஅசிங்கமாக திட்டிக்கொண்டு இருந்தார்கள். அப்போது நானும் என்

மனைவியும் வெளியே வந்து பார்த்தபோது இரண்டு நபர்கள் சட்டையை பிடித்து இழுத்து கையால் மாறி மாறி அடித்தார்கள். மேலும் இரண்டு நபர்கள் என்னை காலால் எட்டி உதைத்தார்கள். உடனே இருவரும் ஆளுக்கொரு தடியை எடுத்து என்னை அடிக்க வந்தனர். இதை பார்த்த என் மனைவி சத்தம் போடவே என் அப்பாவும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் சண்டையை விளக்கிவிட்டார்கள். மேற்கண்ட அனைவரும் கையில் வைத்திருந்த தடிகளை காட்டி உன்னை கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். யார் என்னை அப்போது மிரட்டினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியவில்லை. எதிரிகளுக்கும், எனக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததால் எதிரிகள் தான் என்னை வீட்டில் வந்து அடித்தும் மிரட்டியிருப்பார்கள் என்று நினைத்து போலிசாரிடம் புகார் கொடுத்துவிட்டேன். பின்னர் தான் எதிரிகள் இந்த சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று தெரியவந்தது. நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>சாட்சியை அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதின்பேரில் அனுமதியளித்து அ.த.கு.வி.</u>

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நான் எதிரிகளுடன் தற்போது சமாதானமாகி தற்போது சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 21.12.2024 ம் தேதி இரவு 7.00 மணிக்கு நான் எனது வீட்டு வாசலில் நின்றுகொண்டு இருந்தேன் என்றால் சரியல்ல. அப்போது செங்கதர், கார்த்திக்ராஜா, செம்பருதி, திலிப்குமார் ஆகியோர்கள் என்னை தகாத வார்த்தைகாளல் என்னை திட்டியும் கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது

எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் எதிரிக்கு ஆதரவாக அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.